பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை –9

கடித எண் 29872/ஆ.தே.வா/2017–2, நாள் 08.01.2018

அனுப்புநர்
திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்,
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6

பள்ளிக்கல்வி இயக்குநர்,சென்னை – 6

தொடக்கக் கல்வி இயக்குநர்,சென்னை – 6

இயக்குநர்,
மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6

ஐயா,

பொருள் ஆசிரியர் தகுதி தேர்வில் வெயிட்டேஜ் முறையில் தரவரிசைப் பட்டியல் தயாரிப்பது சார்ந்து 02.01.2018 அன்று காலை 10.00 மணியளவில் பள்ளிக்கல்வித் துறை கூட்ட அரங்கில் உயர்மட்டக் குழு கூட்டம் நடைபெற்றது – கூட்ட நடவடிக்கை குறிப்பு – சார்ந்து.

பார்வை 1. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.075832/சி2/இ5/2017, நாள் 03.11.2017.
2. அரசுக் கடித எண் 29872/ஆ.தே.வா/2017–1, நாள் 28.12.2017

---------

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு சார்ந்து 02.01.2018 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தகவலுக்காகவும் தக்க மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து தங்களுக்கு அனுப்பப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

பள்ளிக் கல்வித் துறை

02.01.2018 அன்று காலை 10.00 மணியளவில் ஆசிரியர் தகுதித் தேர்வில் வெயிட்டேஜ் முறையில் தரவரிசை பட்டியல் தயாரிப்பது சார்ந்து உயர்மட்டக் குழுவில் விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்று இக் கூட்டத்தினை நடத்தினார்கள்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு:–

1. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
2. முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை
3. தலைவர் (பொறுப்பு), ஆசிரியர் தேர்வு வாரியம்
4. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம்
5. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
6. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம்

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:–

(i) அரசாணை (நிலை) எண்.71, பள்ளிக் கல்வித் (ஆதேவா) துறை, நாள்.30.05.2014 கல்வித் தகுதி மற்றும் ஆசிரியர் தகுதித் தேர்வுகளுக்கு வழங்கப்பட்டு வரும் தகுதி மதிப்பெண்கள் (weightage) குறித்த வழிகாட்டுதல்கள் மற்றும் அரசாணை (நிலை) எண்.25, பள்ளிக் கல்வித் (ஆதேவா) துறை, நாள்.06.02.2014ல் ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சியில் இட ஒதுக்கீடு பிரிவினருக்கு BC/BCM /MBC/DNC/SC/SCA/ST/ மற்றும் PWD பிரிவினருக்கு வழங்கப்பட்டு வரும் 5% மதிப்பெண் சலுகையினை தொடர்ந்து கடைபிடிக்கலாம்.

(ii) அரசு ஆணை (நிலை) எண்.181, பள்ளிக்கல்வித் துறை, நாள்.15.11.2011 – ன்படி ஆசிரியர் தகுதித் தேர்வானது ஆண்டுதோறும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் நடத்தப்பட வேண்டும்.

(iii) ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஆசிரியர் தகுதித் தேர்வுச் சான்றிதழ் ஏழு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என்பதால் அதன் அடிப்படையிலான தரவரிசைப் பட்டியலில் உள்ள தேர்வர்களின் பெயர்கள் ஏழு ஆண்டுகளுக்கு பின்னர் நீக்கம் செய்யப்படும்.

(iv) தேர்வர்கள் தங்களது கல்வித்தகுதியினை பொருத்தவரை மதிப்பெண்களை உயர்த்திக்கொள்வதற்கு வழிவகை இருப்பதால் அதன்படி தரவரிசைப் பட்டியல் மாறுதலுக்குட்பட்டதாகும்.

(v) அரசு ஆணை (நிலை) எண்.181, பள்ளிக் கல்வி (ஆதேவா) துறை நாள்.15.11.2011ல் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் பின்வரும் தேர்வுகளில் மீண்டும் தேர்ச்சி பெறுவதற்கு வழிவகைச் செய்யப்பட்டுள்ளதாலும், தேர்வர்கள் தங்களது ஆசிரியர் தகுதித் தேர்வில் பெற்றுள்ள மதிப்பெண்களை பின்வரும் தேர்வுகளில் உயர்த்திக் கொள்வதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகின்ற ஆசிரியர் தகுதித் தேர்வு முடிவின் அடிப்படையில் தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம் அவர்களால் வெளியிடப்படுகின்ற தரவரிசைப் பட்டியல் (Rank list) மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

(vi) வருங்காலங்களில், தேர்வர்களால் விண்ணப்பிக்கப்படுகின்ற படிவத்தில் குறிப்பிடப்படும் மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கலாம். இதன்படி, அனைவரது கல்விச் சான்றிதழ்களை தரவரிசைப்பட்டியலுக்காக சரிபார்க்கும் அவசியம் ஏழாது. இருப்பினும்,

அவ்வாறு வெளியிடப்படுகின்ற தரவரிசைப் பட்டியல் என்பது ஆசிரியர் நியமனத்தின் போது மேற்கொள்ளப்படும் அசல் சான்றிதழ் சரிபார்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையை கொண்டு வரலாம்.

(vii) பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவில் தெரிவித்துக் கொண்டுள்ள ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சிக்குப் பின்னர் மீண்டும் ஒரு போட்டித் தேர்வு நடத்துவது என்பது அவசியமற்றதாக கருதப்படுகிறது. ஏனெனில், அரசாணை (நிலை) எண்.71, பள்ளிக் கல்வித் (ஆதேவா) துறை, நாள்.30.05.2014ல் மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.25, பள்ளிக் கல்வித்துறை, நாள்.6.02.2014ல் வகுக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, கல்வித் தகுதி / இட ஒதுக்கீடு/ ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சி ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற தரவரிசைப் பட்டியலில் முன்னிலை வகிப்பவர்களுக்கு உரிய நியமன ஆணையினை வழங்கலாம் .

(viii) ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதன் அடிப்படையிலோ (அல்லது) தரவரிசைப் பட்டியலில் தங்களது பெயர் இடம் பெற்றுள்ளது என்ற அடிப்படையிலோ அரசு வேலைக்கு உரிமை கோரிட இயலாது.

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்